


**02. 10. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் 156-வது பிறந்தநாளை ஒட்டி அவரது நினைவிடத்தில் குடியரசு தலைவர், பிரதமர், மரியாதை செலுத்தினர்.

2. தீவிரவாதத்தை முற்றிலும் தகர்க்கும் திறன் நம் ராணுவத்திடம் உள்ளது என பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. வெற்றி திருநாளாம் விஜயதசமி நாடுமுழுவதும் இன்று கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

4. டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் தொடர்பாக அம்மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

5. அஹமதாபாத் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் வெஸ்ட் இண்டீஸ் தடுமாறி வருகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

<u>காந்தி ஜெயந்தி</u>

தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் 156-வது பிறந்தநாள் இன்று நாடுமுழுவதும் காந்தி ஜெயந்தியாக கொண்டாடப்படுகிறது

புதுதில்லி ராஜ்கட்டில் அமைந்துள்ள காந்தியடிகளின் நினைவிடத்தில் குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் மலர்த்தூவி மரியாதை செலுத்தினர். சர்வமத பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

சர்வதேச அஹிம்சை தினமாக கடைபிடிக்கப்படுவதை ஒட்டி பல்வேறு நாடுகளில் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் காந்தியடிகளின் திருவுருவச்சிலைக்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து முதலமைச்சர் வெளியிட்ட செய்தியில் காந்தியடிகள் பிறந்த நாளில் அவரை நினைவு கூறும் வகையில் கதர் ஆடைகள் உடுத்துவோம் என வலியுறுத்தியுள்ளார்.

காந்தி ஜெயந்தியை ஒட்டி தூய்மையே சேவை இயக்கம் நாடுமுழுவதும் இன்று தொடங்கி இம்மாத இறுதிவரை கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளை முன்னிட்டு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் சிறப்பு கிராமசபை கூட்டங்களும் இன்று நடைபெறுகின்றன.

சிவகங்கை மாவட்டத்தில் இக்கூட்டங்கள் வரும் 11ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖

<u>கே.என்.நேரு</u>

திருச்சி தலைமை தபால் நிலையம் அருகே அமைந்துள்ள காந்தியடிகளின் திருவுருவச்சிலைக்கு மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து திருச்சி ரயில் நிலையம் எதிரில் உள்ள காதிகிராப்ட் வளாகத்தில் தீபாவளி கதர் சிறப்பு விற்பனையை அமைச்சர் இன்று தொடங்கி வைத்தார்.

காந்தி ஜெயந்தியை ஒட்டி பெரம்பலூர், நெல்லை, தூத்துக்குடி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் காந்தியடிகளின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதோடு, தீபாவளி கதர் சிறப்பு விற்பனை தொடங்கியது.

❖❖❖❖❖❖❖

<u>.. மியூசிக் ..</u>

சேவை நல்லாட்சி என்ற தாரக மந்திரத்துடன், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கு அயராது செயலாற்றி வரும் நிலையில், தேச பாதுகாப்பு, ராணுவ வலிமை, உள்நாட்டு உற்பத்தி திறனுடன் ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல் வெற்றியை மோடி அரசு வென்றது குறித்த சிறப்பு செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. மியூசிக் ..

நம் தேசம் தொழில்நுட்ப ரீதியாக உலகளாவிய ஆற்றலில் தற்சார்பு திறனுடன் வலுவான தீர்க்கமான முடிவுகள் எடுக்கும் நாடாக உருவெடுத்துள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் குறித்து மக்களவையில் நடைபெற்ற சிறப்பு விவாதத்தின் போது உரையாற்றிய பிரதமர், சர்வதேச சமூகத்தில் இந்தியா மீதான மாறிவரும் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை எடுத்துரைத்தார்.

.. பிரதமர் வாய்ஸ் ..

ஏப்ரல் 22-ம் தேதி ஜம்மு காஷ்மீரின் பெஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து மே 6, 7 தேதிகளின் இரவு நேரத்தில் இந்தியா ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலை தொடங்கியது.

தாக்குதல் தொடங்கிய சில நிமிடங்களிலேயே பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலிருந்து 9 தீவிரவாத மறைவிட முகாம்களை தகர்த்தழித்தது.

தேவை ஏற்பட்டால் இந்தியா துரிதமாகவும், துல்லியமாகவும், தாக்குதல் நடத்தும் திறன் படைத்தது என்ற செய்தி இதன்மூலம் பறைசாற்றப்பட்டது.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வான்பாதுகாப்பு முறைகள் மிகத் திறமையாக தங்களது பணிகளை செவ்வனே நிறைவேற்றின.

பாகிஸ்தான் வான் பாதுகாப்பு தொழில்நுட்பங்களின் மீதான இந்தியாவின் தாக்குதல், அதிகரித்து வரும்
நம் தேசத்தின் ராணுவ வலிமையை உலகிற்கு புலப்படுத்தியுள்ளது

இந்தியாவின் ராணுவத்திறன் பிரம்மோஸ் ஏவுகணைகள் குறித்து தமிழ்நாடு உபயோகிப்பாளர் பாதுகாப்பு குழுவின் திருச்சி பிரிவு செயலாளர் திரு.புஷ்பவனம் தெரிவிக்கையில்

.. பயனாளி வாய்ஸ் ..

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் கூற்றுக்கு ஏற்ப தீவிரவாத தாக்குதல்கள் நம்நாட்டின் மீது மீண்டும் தொடர்ந்தால் இந்தியா மிகப்பெரிய அளவில் பதிலடி தாக்குதல் நடத்தும் திறன் படைத்தது என்பது திண்ணம்.

.. மியூசிக் ..

❖❖❖❖❖❖❖

<u>சரக்கு சேவை வரி</u>

சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் நாட்டின் மறைமுக வரி கட்டமைப்பை எளிதாக்கியுள்ளது.

புதிய வரி கட்டமைப்பின் கீழ் இரண்டடுக்கு வரி முறை மட்டுமே நடைமுறைபடுத்தப்பட்டுள்ள நிலையில், உடற்பயிற்சி மைய உபகரணங்கள் மற்றும் மிதிவண்டிகளுக்கான சரக்கு சேவை வரி ஐந்து சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்த வரி குறைப்பு மகிழ்ச்சி அளிப்பதாக கும்பகோணத்தை சேர்ந்த ஊட்டச்சத்து மற்றும் உடல் ஆரோக்கிய பயிற்சியாளர் திருமதி. அனித்தா ராஜா எமது செய்திப்பிரிவிடம் தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

<u>ராஜ்நாத் சிங்</u>

தீவிரவாதம் எந்த வடிவில் இருந்தாலும் அதை முற்றிலும் தகர்க்கும் திறன் நம் நாட்டு ராணுவத்திடம் உள்ளது என பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் கட்ச் பகுதியில் ஆயுதப்படை வீரர்களுடன் இன்று தசரா விழா கொண்டாட்டங்களில் அமைச்சர் பங்கேற்றார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றியஅவர், நாட்டின் பாதுகாப்பு அமைப்பை தகர்க்க பாகிஸ்தான் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்ததாக குறிப்பிட்டார்.

ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல் நடவடிக்கையின் போது நம்நாட்டின் ராணுவத்திறன் உலக நாடுகளுக்கு புலப்பட்டதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டம் தொடரும் என்றும் அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖

<u>விஜயதசமி</u>

வெற்றி திருநாளாம் விஜயதசமி இன்று கொண்டாட படுவதை ஒட்டி புதுதில்லி செங்கோட்டையில் நடைபெறும் தசரா கொண்டாட்டங்களில் குடியரசு தலைவரும், ராம்லீலா குழு சார்பிலான தசரா கொண்டாட்டங்களில் பிரதமரும் இன்று பங்கேற்கவுள்ளனர்.

கேரள மாநிலம் திரிச்சூரில் இன்று நடைபெற்ற வித்யாரம்பம் நிகழ்ச்சியில் மத்திய இணையமைச்சர் திரு.சுரேஷ்கோபி பங்கேற்றார்.

திருவாரூர், நெல்லை, கன்னியாகுமரி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் திருக்கோவில்களில் நடைபெற்ற வித்யாரம்பம் நிகழ்ச்சியில் அதிகளவில் குழந்தைகள் பங்கேற்று அகரத்தை எழுதி கல்வியை தொடங்கினர்.

தூத்துக்குடி மாவட்டம் குலசேகரபட்டிணம் அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோவில் தசரா திருவிழாவின் முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் இன்று நள்ளிரவு நடைபெறுவதை ஒட்டி ஏராளமானோர் அங்கு குவிந்துள்ளனர். காவல்துறையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

<u>லால்பகதூர் சாஸ்திரி</u>

முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் 121-வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசு தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர்.

❖❖❖❖❖❖❖

<u>காமராஜர்</u>

சுதந்திரபோராட்ட வீரரும் தமிழக முன்னாள் முதலமைச்சருமான காமராஜரின் 50-வது நினைவுநாள் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில் எளிமை, நேர்மை, மக்கள் சேவையில் அன்னாரது பங்களிப்பை பாராட்டியுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்ட சமூகவலைதளப் பதிவில் தமிழகத்தின் அணைகள் கட்டமைப்பு, தொழில்வளம், கல்வி ஆகியவற்றிற்கு அடிப்படையாக திகழ்ந்தவர் காமராஜர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

மக்களவை எதிர்கட்சித்தலைவர் திரு.ராகுல் காந்தி வெளியிட்டுள்ள செய்தியில் விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்கு காமராஜர் ஆற்றிய பணிகள் அனைத்து தலைமுறையினருக்கும் ஊக்கமளித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வெளியிட்டுள்ள செய்தியில் பொதுவாழ்வின் இலக்கணமாக திகழ்ந்தவர் காமராஜர் என கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

<u>முதலமைச்சர் ஆய்வு</u>

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ள நிலையில் டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் மற்றும் சேமிப்பு கிடங்குகள் தொடர்பாக முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

தஞ்சை, திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்ட ஆட்சித்தலைவர்கள் காணொலி மூலம் பங்கேற்ற இக்கூட்டத்தில் நெல்மணிகள் உலைக்கு செல்லும் வரை பாதுகாக்கப்பட வேண்டுமென்று முதலமைச்சர் வலியுறுத்தியதோடு, நெல் சேமிப்பு கிடங்குகளில் தேவையான வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

இதனிடையே முதலமைச்சர் 2 நாள் பயணமாக இன்றுமாலை ராமநாதபுரம் செல்கிறார்.

❖❖❖❖❖❖❖

<u>தர்மபுரி வாய்ஸ்</u>

தர்மபுரி மாவட்டம் உதயமாகி 60 ஆண்டுகள் இன்றுடன் நிறைவடைகிறது

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

<u>இருவரி</u>

தூய்மை சேவை இயக்கத்தின் கீழ் சேலம் ரயில்வே கோட்டத்தில் 10 ஆயிரம் பணியாளர்கள் பங்கேற்றதாக கோட்ட மேலாளர் திரு.பன்னாலால் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் உள்ள மத்திய ரிசர்வ் காவல்படை வளகத்தில் காவல்துறை துணை இயக்குநர் திரு.அருண்குமார் தலைமையில் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தூய்மைப்பணிகளில் ஈடுபட்டனர்.

தூத்துக்குடி மாவட்டம் ஆத்தூர் அருகே புல்லாவெளி கடற்கரையிலிருந்து இலங்கைக்கு கடத்தவிருந்த பீடி இலை மூட்டைகளை காவல்துறையினர் இன்று பறிமுதல் செய்து 2 பேரை கைது செய்தனர்.

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

அஹமதாபாத்தில் இந்தியாவிற்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல்நாளான இன்று வெஸ்ட்இண்டீஸ் தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 9 விக்கெட் இழப்பிற்கு 162 ரன் எடுத்திருந்தது.

இந்திய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் வெஸ்ட் இண்டீஸின் விக்கெட்டுகள் மளமளவென சரிந்தன.

முகமது சிராஜ் 4

பும்ரா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

❖❖❖❖❖❖❖